

**FRIDAY**

**SERMON**

10 MAY 2019

(04 RAMADAN 1440 AH)

**HADHRAT MUHYI-UD-DIN AL-KHALIFATULLAH**
**MUNIR AHMAD AZIM**

# MOON SIGHTING & RAMADAN FASTING

# பிறை பார்வை மற்றும் ரமலான் நோன்பு நோற்பு

**TAMIL VERSION** தமிழ் பதிப்பு

சலாமிற்கு பிறகு தஷஹ்ஹுதும், தஅவுசும், அல்.ஃ.பாத்திஹாவும் ஓதிக்கொண்டு **ஹஸ்ரத் கலீ.ஃ.பத்துல்லாஹ் முனீர் அஹ்மது அஸீம் (அலை)** அவர்கள் தம் ஜுமா பேருரையினை ஆரம்பித்தார்.

شَهۡرُ رَمَضَانَ ٱلَّذِيٓ أُنزِلَ فِيهِ ٱلۡقُرۡءَانُ هُدٗى لِّلنَّاسِ
وَبَيِّنَٰتٖ مِّنَ ٱلۡهُدَىٰ وَٱلۡفُرۡقَانِۚ فَمَن شَهِدَ مِنكُمُ ٱلشَّهۡرَ فَلۡيَصُمۡهُۖ

**ரமலான் மாதம் திருக்குர் ஆன் அருளப்பெற்ற மாதமாகும். குர் ஆன் எல்லா மக்களுக்கும் நேர்வழி காட்டக் கூடயதும் (நன்மை, தீமையை) பிரித்தறியக் கூடியதும் ஆகும். எனவே, உங்களுள் இம்மாதத்தைக் காண்பவர் அதில் நோன்பு நோற்க வேண்டும். (2:186)**

**அல்ஹம்துலில்லாஹ் சும்ம அல்ஹம்துலில்லாஹ்!** ரமலான் அதன் அருள் நிறைந்த வீயூகங்களுடன் ஒரு முறைக்கூட நம்மை வரவேற்றுக்கொள்வதுடன், அதன் எல்லாவற்றிலும் பங்கேற்று, அல்லாஹ்விடம் இணக்கத்தை ஏற்படுத்தி, அவனை மகிழவைப்பதற்காக நம்மை அழைக்கிறது.

தமிழ் நாட்டை சார்ந்த எனது தோழர்களில் ஒருவரிடமிருந்து நான் பெற்ற ஒரு கேள்விக்கு பதிலாக **"ரமலான் மாதத்தில் பிறை பார்வை மற்றும் நோன்பு நோற்பு"** குறித்து இத்தருணத்தில் சற்று வெளிச்சம் வழங்க நான் விரும்புகிறேன், அதிலிருந்து அனைத்து முஸ்லீம் சமுதாயவும் பயன் பெற வேண்டும்

அருள் நிறைந்த இறை சொற்களும், கட்டளைகளும் அடங்கிய திருக் குர் ஆன் மற்றும் திருநபி அவர்களின் திரு சொற்களும் ரமலான் மாதத்தில் நோன்பு நோற்பை ஆரம்பிப்பதற்கு பிறை பார்ப்பதன்பால் நம்முடைய கவனத்தை திருப்புகின்றது. அதைப்போன்றே ஈதுல் பித்தர் கொண்டாட்டம் ஆரம்பிப்பதற்கு முன்னால் ரமலான் மாதத்தின் இறுதி நோன்பை முறித்துக் கொள்வதற்கும் பிறை தரிசனத்தின் அவசியம் உள்ளது.

இப்னு உமர்(ரலி) அவர்கள் விவரிக்கின்றார். அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள் கூறுவதை நான் கேட்டேன் **("ரமலான் மாதத்தின்) பிறை தென்படும் பொழுது நீங்கள் நேன்பு நோற்பை தொடங்குங்கள். (ஷவ்வா மாதத்தின்) பிறை தென்படும் பொழுது நீங்கள் நோன்பு நோற்பை விட்டு விடுங்கள். வானம் மேகமூட்டமாக இருப்பதன் காரணமாக பிறை உங்களுக்கு தென்படாமலிருந்தால் நீங்கள் ரமலான் மாதத்தை 30 நாட்களாக கணித்து கொள்ளுங்கள்" (புகாரி, முஸ்லீம்).**

நான் குறிப்பிட்டுள்ள குர்-ஆனிய வசனம் மற்றும் ஹதீஸிலிருந்து இஸ்லாத்தில் பிறை பார்ப்பது மிகவும் முக்கியமானது என்பது தெள்ள தெளிவாக புரிந்து கொள்ளலாம். குறிப்பாக அல்லாஹ் மற்றும் அவனது தூதர் (ஸல்) அவர்களும் ஒப்புதல் அளித்த இஸ்லாமிய நாட்காட்டியானது முழுக்க முழுக்க சந்திரனை அடிப்படையாகக் கொண்டுள்ளது. (அதாவது சந்திர தரிசனத்தை அடிப்படையாகக் கொண்ட நாட்காட்டி – லுனர் கலெண்டர்).

அல்லாஹ்வின் அருளால், இத்தகைய முக்கியமான விஷயத்தில் ஹஸ்ரத் முஹம்மது (ஸல்) அவர்கள் தனது வழிகாட்டுதலை வழங்கிய போது தனது தோழர்கள் தனிப்பட்ட நாடுகளில் வாழ்ந்து வந்தாலும்கூட அவர்களுக்குள் இஸ்லாமிய ஒற்றுமை இருக்க வேண்டும் என்பதை மனதில் கொண்டிருந்தார்.

ஆனால், இன்று அண்ணல் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் சமுதாயம் துண்டிக்கப்பட்டிருப்பதை நாம் காண்கிறோம். பிறை பார்ப்பது குறித்து ஒவ்வொரு பிரிவினைச் சார்ந்தவர்களும் தங்களது சொந்த முடிவுகளை எடுக்கின்றனர். அதாவது பிறை பார்ப்பதில் தங்களது சொந்த நாட்டை பின்பற்ற வேண்டும்? அல்லது நவீன ஒளியியல் கருவிகளின் உதவியுடன் பெறும் தீர்மானங்களை பின்பற்றவேண்டுமா? அல்லது அதைவிட மேம்பட்ட தொலைநோக்கி கருவி மற்றும் இருவிழிக்கருவிகளை பயன்படுத்துவோமா? போன்ற குழப்பங்களில் இன்று சமுதாயம் சென்றடைந்தது.

சமுதாயத்தில் ஏற்பட்டுவிட்ட ஒற்றுமையின்மை, இத்தகைய கருத்து வேறுபாடுகளை அவர்களுக்கிடையே உருவாக்கியுள்ளது. இஸ்லாம் அதாவது திருக்குர் ஆன் மற்றும் திரு சுன்னத் ஆகிய திருசொற்கள் ஒருபோதும் இத்தகைய கருத்து வேறுபாடுகளை நமக்கு கற்பிக்கவில்லை. ஆகவே எல்லாம் சீராக முன்செல்ல வேண்டுமென்றால் அனைத்து முஸ்லீம்களுக்கும் ஒரு பொதுவான தலைவர் இருக்க வேண்டும். அந்த தலைவரின் தீர்மானப்படி அமைதி, நல்லிணக்கம் மற்றும் ஒற்றுமையுடன் கலந்தாலோசித்து ஒரு இறுதி முடிவு எடுக்க வேண்டும். அதற்காகத்தான் அல்லாஹ் தனது தூதரை, கலீ∴பத்துல்லாஹ்வை, மற்றும் ஷரிஅத்தை மெய்பிக்கும் நபியை அனுப்பி வைத்து தனது வழிகாட்டுதலை ஒவ்வொரு காலகட்டங்களிலும் கடைபிடித்து வருகின்றான். அத்தகைய இறைத்தூதரின் வழிகாட்டுதலை பின்பற்றுவதன் மூலம் முஸ்லீம் சமுதாயம் இஸ்லாத்தின் அனைத்துக் கோட்பாடுகளிலும் ஒன்றுபட்டு அவர்களின் அன்றாட வாழ்கையில் அதனை நடைமுறைப்படுத்தி வாழ்வதற்கு வழிவகுக்கப்படுகிறது.

அண்ணல் நபிகள் (ஸல்) அவர்களின் திரு வபாத்திற்கு பிறகு அன்னாரிடமிருந்து நமக்கு கிடைத்த அந்த பாரம்பரிய சொத்துக்கு, முற்றிலும் மாறாக நாம் இன்று வாழ்ந்து வருகிறோம் என்பது உண்மையாகும். இன்று ஒரே

நாட்டில் கூட பல்வேறு பிரிவினர்கள் உள்ளன. எப்போது நோன்பு நோற்கவேண்டும், எப்போது நோன்பு நோற்கக்கூடாது என்பதை அப்பிரிவினர்கள் தங்களது சொந்த அளவுருக்களுக்கேற்ப முடிவு செய்கின்றார்கள். அதே நாட்டில்தான் ரமலான் ஆரம்பிப்பதும், முடிவடைவதும் வெவ்வேறு தேதிகளிலாகயிருக்கும். அதன் காரணமாக ஷவ்வால் மாத ஆரம்பமும் ஈதுல்பித்தர் திருநாளும் வெவ்வேறு நாட்களில் அமைகிறது.

உலகின் ஏழு கண்டங்களாகிய ஆசியா, ஐரோப், வட அமேரிக்கா, தென் அமெரிக்கா, ஆஸ்திரேலியா, ஆப்பிரிக்கா மற்றும் அண்டார்டிக்கா ஆகியவை பரந்த பிரதேசங்களாகயிருப்பதால், உண்மையில் பிறை பார்வையும் ஒரு பகுதியிருந்து மற்றொரு பகுதிக்கும், ஒரு நாட்டிலிருந்து இன்னொரு நாட்டிற்கும் மாறுபடலாம். இதுவேதான் ஹஸ்ரத் முஹம்மது (ஸல்) அவர்கள் தனது வாழ்நாளில் ஒற்றுமையை வலியுறுத்தியிருந்தார். அதன் விளைவாக ரமலானுக்காகவோ அல்லது வேறு ஏதேனும் மாதத்திற்காகவோ பிறை பார்க்கப்படும் போது அப்பகுதியை சார்ந்த ஒட்டுமொத்த முஸ்லீம்களும் ஒற்றுமையாக ஓரே நேரத்தில்தான் நோன்பு நோற்க்கவும் மற்றும் ஒற்றுமையாக நோன்பு நோற்பை முறிக்கவும் செய்திருந்தனர். மட்டுமின்றி தொலை தூர இடத்திலோ அல்லது பிற நாடுகளிலோ உள்ள முஸ்லீம்கள் தங்களது நாட்டில் தென்பட்ட பிறையை அடிப்படையாக கொண்டு அதன்படி ஒற்றுமையாக செயல்பட்டு வந்தனர்.

காலப்போக்கில், உலகம் புதிய நவீனமயமாக்கப்பட்ட நூற்றண்டுகளுக்குள் புகுந்துக் கொண்டதால் ஒவ்வொரு கண்டங்களை சார்ந்த நிலப்பகுதிகள் அந்தந்த கண்டங்களுக்குள் தெளிவாக வரையறுக்கப்பட்ட நிலையில் அமைந்தது. எனவே ஒவ்வொரு மாநிலமும் தங்களுக்கு சொந்த அரசாங்கம் மற்றும் மாநில விவகாரங்களை நிர்வகிக்க சுதந்திரத்தையும் பெற்றனர். குறிப்பாக இஸ்லாம் மற்றும் அதன் கொள்கைகளுக்கு ஏற்றவாறு வாழ்க்கையை அமைப்பதற்கான சுதந்திரமும் அவர்கள் பெற்றனர். ஆனால் மிக வருத்தத்துடன் கூறுகிறேன். அப்படியிருந்தும் இப்போதும் இஸ்லாத்தில் புதிய குழுக்கள் நாள்தோறும் உருவாகின்றன. நாளுக்குநாள் அவர்களுக்கு இடையேயான பிளவுகள் அதிகரித்து வருகின்றன. மேலும் திருக் குர் -ஆனிய கட்டளைகளுக்கு

இணைங்கியவாறு, முஸ்லீம்களின் முன்னேற்றத்திற்கான முக்கியமான முடிவுகளை எடுப்பதற்கும், இஸ்லாமிய சமுதாயம் ஒரு அமைப்பாக செயல்படுவதற்கும் எந்த ஆலோசனையும் அவர்கள் மேற்கொள்வதில்லை.

அதன் விளைவாக இப்போது மிக பெரிய நாடுகளில் கூட இதுகுறித்து பல சர்ச்சைகள் எழுகின்றன. குறிப்பாக நோன்பு நோற்பை ஆரம்பிப்பதற்கும், அதனை முறித்துக் கொண்டு ஈதுல் பித்தருக்காக ஷவ்வால் மாதத்தின் முதல் நாளை வரவேற்றுக் கொள்வதற்கும் பிறைப்பார்ப்பது மட்டுமே சரியான வழி என்று எண்ணி செயல்பட்டு வந்த இந்தியா மற்றும் ஆப்பிரிக்கா போன்ற நாடுகள் கூட உண்மையான பிறைப் பார்ப்பதற்கு யாரை நம்பலாம் என்பது குறித்து யோசித்து குழப்பத்தில் உள்ளனர்.

அண்ணல் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் காலகட்டத்துடன் ஒப்பிடும் போது, விஞ்ஞானத்தின் கண்டுபிடிப்பு மற்றும் சந்திரனின் ஆய்வு ஆகியவை இன்று விஷயங்களை மேன்மேலும் தெளிவாக காட்டுகிறது என்பது உண்மைதான். ஆயினும்கூட, ரமலானுக்கான பிறையின் கட்டம் மற்றும் பிறை பார்வைபற்றிய நமது ஒவ்வொரு கணக்கீட்டையும் மிஞ்சும் விஷயம் என்னவென்றால் நமது நிர்வாணக் கண்களுடன் பிறையை பார்வையிடுவதேதான். அதாவது நிர்வாணக்கண்களுடன் பிறையை பார்வையிடுவது பிற வழிகளிலான ஆயிரக்கணக்கான கணக்கீடுகளை விட மதிப்புள்ளவையாகும். அல்லாஹ் தனது ஒவ்வொரு அடியார்களின் பார்வை மற்றும் நோக்கத்தை நன்கு அறிந்தவனாகயிருக்கின்றான். மட்டுமல்ல பிற இஸ்லாமிய மாதங்களில் பிறைபார்வை அதைபோலவே ரமலான் மற்றும் ஷவ்வாலுக்கான பிறை பார்வை ஆகிய சான்றுகள், இஸ்லாமிய நடப்பு ஆண்டிற்கான இஸ்லாமிய நாட்காட்டியை உருவாக்குவதற்கு மிகவும் முக்கியத்துவம் வாய்ந்ததாக உள்ளன.

அதனால்தான் அல்லாஹ் மற்றும் அவனது தூதர் முஹம்மது (ஸல்) அவர்களும் அனைத்து முஸ்லீம்களுக்கும் ஒரு எளிய வழிகாட்டுதலை வழங்கியிருந்தனர். அதாவது ஒவ்வொரு சந்திர மாதத்திலும் புதிய பிறை தோற்றத்தின் அடிப்படையில் இஸ்லாமிய நாள்காட்டியை எளிதில் உருவாக்க அவர்களுக்கு போதுமான வழிகாட்டுதலாக அது அமைந்துள்ளது.

ஆகவே இஸ்லாத்தில் வளர்ந்து வரும் அனைத்து குழப்பங்களுக்கும் பரிகாரமாக இந்த விஷயத்தில் சில வழிகாட்டுதல்களை எனது அன்பான தோழர்களுக்கும், மீதமுள்ள உம்மத்திற்கும் வழங்க நான் விரும்புகிறேன்.

## COUNTRY WISE
## உலக வாரியாக

மொரீஷியஸைப் போல ஒரு தீவு அல்லது ஒரு நாடு சிறியதாக இருந்தால், அங்கு பிறைப் பார்ப்பது மிக எளிதாகயிருக்கும். ஒருமுறை பிறையை நிர்வாணக் கண்களால் பார்ப்பது நல்லதுதான் அல்லது தேவைப்பட்டால் - முக்கிய சந்தர்ப்பங்களில் - தொலைநோக்கி கருவி மற்றும் இருவிழிக் கருவியை பயன்படுத்தி பிறை பார்க்கலாம்.

இறைவனுக்குப் பயந்த எந்தவொரு முஸ்லீமானாலும் சரி, அவர் எந்த ஜமா அத்தை சார்ந்தவரானாலும் சரி அவர் அல்லாஹ்வின் பெயரால் சத்தியம் செய்து, தனது அறிக்கையை உறுதிப்படுத்த இரண்டு நபர்களை சாட்சியாக கொண்டுவந்தால், புதிய இஸ்லாமிய மாதம் ஆரம்பித்து விட்டது என்பது உறுதியாகிவிடுகிறது. (இஸ்லாத்தில் சூரிய அஸ்தமனத்திற்கு பிறகுதான் ஒரு நாள் ஆரம்பிக்கிறது.)

## State Wise / District wise
## மாநில வாரியாக / மாவட்ட வாரியாக

உதாரணமாக இந்தியா போன்ற மிக பரந்த நாடுகளில், அது மாநிலங்கள் மற்றும் மாவட்டங்களாகப் பிரிக்கப்பட்டுள்ளது. ஒரு குறிப்பான மாநிலத்திலோ, அல்லது மாவட்டத்திலோ பிறை பார்க்க முடிந்து விடலாம். உதாரணமாக, கேரளாவில் பிறை காணப்பட்டால், அதன் பார்வைக்கு அவர்கள் சாட்சியமளித்துக் கொண்டால், ரமலான் நேன்புக்கான அறிக்கை விடுவிக்கப்பட்டால், கேரளாவிலுள்ள அனைத்து முஸ்லீம்களும் நோன்பு நோற்பில் ஈடுபட வேண்டும். உண்மை என்னவென்றால் இப்போது அல்லாஹ்வின்

தூதர் முஹம்மது (ஸல்) அவர்களின் விருப்பங்களிலிருந்தும் இலட்சியங்களிலிருந்தும் இஸ்லாமிய மக்கள் வெகு தொலைவில் சென்றுவிட்டனர் என்பதை நான் புரிந்துகொள்கிறேன். தற்போதயை சூழலில் கேரளாவை சார்ந்த ஜமா அத்துச் சஹீஹில் இஸ்லாமின் உறுப்பினர்களுக்கு பிறை காட்சியளித்ததாக கேள்விப்பட்டால், அல்லாஹ்வை சாட்சியாக கொண்டு அவர்கள் உறுதியாக கூறினால் நீங்கள் ரமலான் நோன்பு நோற்க்க வேண்டும். இந்நிலமை, தமிழ்நாட்டிற்கும் மற்று இந்தியாவிலுள்ள அனைத்து மாநிலங்களுக்கும் பெருந்தும்.

ஒரு குறிப்பிட்ட மாநிலத்தின் கீழ்வரும் ஒரு விரிவான பகுதி என்றால் உதாரணமாக தமிழ்நாட்டை சார்ந்த **கோட்டார்** என்ற பகுதியை எடுப்போம். அப்பகுதி தமிழ்நாட்டைவிட கேரளாவுக்கு மிக அருகில் உள்ளது. அல்லது உதாரணமாக **களியக்காவிளை**யை எடுத்துக்கொள்வோம். அப்பகுதி கேரளா மற்றும் தமிழ்நாட்டின் எல்கையில் காணப்படுகிறது. அச்செய்தி அந்த பகுதியை அல்லது இடத்தை சார்ந்த மக்களின் கவனத்திற்கு வந்தால் முஸ்லீம்கள் அனைத்தும் குறிப்பாக ஜமா அத்துச் சஹீஹில் இஸ்லாமின் உறுப்பினர்கள் ரமலான் நோன்பு நோற்க வேண்டும். முதலில் கேரளா மக்களுக்கு பிறை காட்சியளித்தால் அவர்கள் உடனடியாக நோன்பு நோற்க வேண்டும், அதை போன்று முதலில் தமிழக மக்களுக்கு பிறை காட்சியளித்தால் அவர்கள் உடனடியாக நோன்பு நோற்க வேண்டும், ஆனால் ஜமா அத்துச் சஹீஹில் இஸ்லாமின் உறுப்பினர்களைப் பெருத்தவரையில் இவ்விஷயத்தில் அவர்களுக்கிடையே ஒருங்கிணைப்பு இருக்கவேண்டும். அவ்வாறேயானால் அப்பகுதியை சார்ந்த எல்லோருக்கும் ஓரே நேரத்தில் நோன்பு நோற்கலாம் ஓரே நேரத்தில் ஈதுல் தொழுகையும் நிறைவேற்றிக் கொள்ளலாம்.

இது தொடர்பாக எனது தனிபட்ட முறையிலான அனுபவங்களை நான் பகிர்ந்துகொள்ள விரும்புகிறேன். நான் அஹ்மதியா முஸ்லீம் ஜமா அத்தின் ஒரு மார்க்க போதகராக ரோட்ரிக்ஸ் தீவில் பணியாற்றி வரும்வேளையில், ரோட்ரிக்ஸ் என்பது முற்றிலும் ஒரு தனித் தீவாகயிருப்பினும், அது மொரீஷியஸின் ஒரு மாவட்டமாக அதன் மிக அறில் உள்ளது. அதனால் ரமலான் மற்றும் ஷவ்வால் பிறை காட்சியளித்ததாக தகவலை நான் பெற்றுக்கொண்டால் அதற்கேற்ப

ரமலான் நோன்பு நோற்கவும் மற்றும் முறிக்கவும் செய்வேன். ஏனெனில் ரோட்ரிக்ஸ் என்பது மௌரிஷியிஸின் ஒரு பகுதியாகிறது. ஆனால் நான் ரீயூணியன் தீவில் பணியாற்றி வந்தபோது, ரீயூணியன் ரோட்ரிக்கலைவிட மொரீஷியஸிற்கு மிக அருகில் இருந்திருந்தும் கூட ரமலான் நோன்பு நோற்பதிலும் நோன்பு முறிப்பதிலும் நான் மெரீஷியஸைப் பின்பற்றவில்லை. எனவே ரீயூனியன் தீவில்வைத்துள்ள எனது ஈது கொண்டாட்டங்கள்யாவும், மௌரீஷியஸ் ஈது கொண்டாட்டங்களிலிருந்து முற்றிலும் மாறுபட்டதாக அமைந்திருந்தது.

**இன்ஷா அல்லாஹ்! வரும்காலத்தில் நமது ஜமா அத்துச் சஹீஹில் இஸ்லாமிற்கு சொந்தமான நிலையில் ஒரு ஹிலால் குழுவை அல்லாஹ் ஏற்படுத்தவேண்டும் என்பதும், அது சரியான (ஒவ்வொரு நாட்டிலும், மாநிலங்களிலும்) முறையில் இயங்குவதற்கான அறிவை அல்லாஹ் வழங்க வேண்டும் என்பதும் எனது தாழ்மையான பிரார்த்தனை மற்றும் விருப்பமாக இருக்கிறது. அதன்படி நம் ஜமா அத்தை சார்ந்தவர்களுக்கு பிறை காட்சியளித்ததாக அவர்கள் கூறும் பட்சத்தில் (குறைந்தபட்சம் இறையச்சமுள்ள மூன்று நபர்களில் ஒருவர் பிறை பார்த்ததாக சத்தியம் செய்து கூறவேண்டும், மற்ற இருவர் அதற்கு சாட்சியாக இருக்கவேண்டும்.) அதனை உலக அளவிலும் அல்லது மாநில அளவிலும், அல்லது மாவட்ட அளவிலும் அமல்படுத்தி கொள்வதன் மூலம் நமது ஜமா அத்துச் சஹீஹில் இஸ்லாமின் அனைத்து உறுபினர்களால் ஒரு புதிய இஸ்லாமிய மாதம் ஆரம்பித்திடவும் செய்யும்.**

மேலும் உதாரணமாக, தமிழகத்தை சார்ந்த ஒரு ஜமா அத்துச் சஹீஹில் இஸ்லாமின் உறுப்பினருக்கு ரமலான்பிறை காட்சியளித்ததாக அல்லாஹ்வை சாட்சியாக கொண்டு அவர் கூறுகையில், தனது செய்தி உண்மை என்பதை உறுதிபடுத்த இரண்டு நபர்களை அவர் அழைத்துவந்தால், அந்நிலையில் தமிழகத்தைசார்ந்த அனைத்து ஜமா அத்துச் சஹீஹில் இஸ்லாமின் உறுப்பினர்களும் ஒரே நேரத்தில் ரமலான் நோன்பு நோற்கவும் மற்றும் முறிக்கவும் வேண்டும். மட்டுமின்றி ஈதுல் பித்தர் அவர்கள் ஒருங்கிணைந்து கொண்டாடவும் வேண்டும். அதே கணம் இரண்டு மாநிலங்களுடைய எல்லையில் வாழும் மக்கள், இந்த இரண்டு மாநிலங்களில் எந்த மாநிலம் பிறை

காட்சியளித்ததை தொடர்ந்து முதலில் ரமலான் நோன்பு நோற்கின்றார்களோ அவர்களை பின்பற்ற வேண்டும். நான் ஏற்கனவே பல முறை சுட்டிக்காட்டியதன்படி, அதாவது ஒரு இஸ்லாமிய மாதம் என்பது 30 நாட்களுக்கு அதிகமாக ஒருபோதும் இருக்காது. ஒன்று 29 நாட்களாகயிருக்கும் அல்லது 30 நாட்களாகயிருக்கும் அல்லாமல் எந்தவொரு ரமலான் அல்லது இஸ்லாமிய மாதமும் 28 நாட்களாகவோ அல்லது 31 நாட்களாகவோ இருக்காது.

## The Ideal Islamic Situation
## சீர்மையான இஸ்லாமிய நிலைமை

எனது தனிப்பட்ட முறையிலான நோக்கில், ஒரு பெரிய நாடானாலும் சரி அல்லது ஒரு சிறிய நாடானாலும் சரி அந்த நாட்டைச் சார்ந்த அனைத்து முஸ்லீம்களும் ஒன்றுபட்டு செயல்படும் காலம் வந்தடைவது மிக அவசியமானதாக நான் காண்கிறேன். அதுவே எனது மிகுந்த விருப்பம் மற்றும் பிரார்த்தனையாக உள்ளது. உதாரணமாக இந்தியாவை எடுத்துக் கொள்வோம். அங்குள்ள அனைத்து மக்களும் எல்லைகள், மாவட்டங்கள் மற்றும் மாநிலங்களை போன்ற எந்த வேறுபாடுகளுமின்றி ஒரே இஸ்லாமிய நாட்காட்டியை பின்பற்ற வேண்டும். இது முற்றிலும் சாத்தியமான ஒன்றாகும். ஏனெனில் இது ஒரே நாடாக இருக்கிறது. மேலும் அதற்கு சற்று விளக்கமளிப்பேமேயானால், அதாவது ஒரு இறையச்சமுடைய ஒரு முஸ்லீம் தனக்கு பிறை காட்சிதந்ததாக கூறிக்கொண்டால், இந்திய அரசாங்கத்தின் ஒத்துழைப்புடன் அச்செய்தியை அறிவிக்க வேண்டும் ஏனெனில் ஒரு நபருக்கு அல்லது ஒரு மாநிலத்திற்கு பிறை கட்சியளித்திருப்பதனாலாகும். அவ்வாறேயானால் கேரளா, தமிழ்நாடு மட்டுமின்றி இந்தியாவிலுள்ள அனைத்து மாநிலங்களுக்கும் ஒரே நாளில்தான் ஈது மற்றும் ஹஜ்ஜு பெருநாளை கொண்டாட முடியும். இதுவே சீர்மையான இஸ்லாமிய முறையாக இருக்கிறது. ஒரு நாட்டைச் சார்ந்த முஸ்லீம்களை பொறுத்தவரை அவர்கள் நோன்பு நோற்பதும் அல்லது ஈது கொண்டாடுவதும் ஒரே நாளிலாக இருக்கவேண்டும். ஒரே நாட்டைச் சார்ந்த மக்கள் வெவ்வேறு நாளில் நோன்பு நோற்பதையும் வெவ்வேறு நாளில் ஈது பெருளாள் கொண்டாடுவதையும் பார்ப்பது அழகல்ல,

ஏனென்றால் எல்லாம் ஒரு சந்திர நாட்கட்டியான இஸ்லாமிய நாட்காட்டியை அடிப்படையாக கொண்டுள்ளதால், எல்லாம் ஒரே நாளில்தான் அமைய வேண்டும். திருமண தம்பதிகளான இருவா், இரண்டு ஜமா அத்தில் இருந்து ஒவ்வொருவரும் வெவ்வேறான நாட்களில் நோன்பு நோற்பதும் வெவ்வேறான நாட்களில் ஈது திருநாள் கொண்டாடுவதும் பார்க்க அழகல்ல, ஆகவே நாம் ஒற்றுமையுடன் இருப்போமேயானால் இந்தியாவிலுள்ள அனைத்து இஸ்லாமிய மக்களுக்கும் ஒரே நாளில் நோன்பு நோற்க முடியும். அவ்வறேயானால் அது மிக சீர்மையான ஒன்றாக அமையும். அதன்மூலம் இந்தியாவுக்கு சொந்தமான மற்றும் தனிப்பட்ட முறையிலான ஒரு இஸ்லாமிய நாட்காட்டி உருவாகிவிடும். இன்ஷா அல்லாஹ்!

ஆகவே ஜமா அத்துச் சஹீஹில் உறுப்பினர்களுக்கடையே நோன்பு நோற்பு மற்றும் பெருநாள் கொண்டாட்டம் ஆகியவற்றில் ஒற்றுமை இருக்கவேண்டும். இதனால் ஒவ்வொரு மாநிலத்தையும் சார்ந்த அமீர், தனது பொறுப்பின் கீழ் உள்ள உறுப்பினர்களுடன் சேர்ந்து, திரு சுன்னத்திற்கு உகந்த வகையில் பிறைபார்ப்பதன் அடிப்படையில் மாத ஆரம்பம் மற்றும் முடிவைப்பற்றி தீர்மானம் கை கொள்ளவேண்டும்.

## Exceptions
## விதிவிலக்குகள்

உண்மையில், பிறையைப் பார்பதற்கு சாத்தியமில்லாத நாடுகளில், அத்தகைய விதிவிலக்கான சூழ்நிலைகளில் பிறையின் உண்மையான உதயத்தை தீர்மானிக்க மேம்பட்ட நவீன ஒளியியல் கருவிகளை பயன்படுத்தலாம். அல்லது அது போன்ற நாடுகள் நவீன ஒளியியல் கருவிகளை பயன்படுத்த விரும்பவில்லையென்றால் அவர்கள் இந்த விஷயத்தில் தங்களது அண்டை நாடு அல்லது மாநிலம் பிறையைப் பார்த்ததாக விடுக்கும் சரியான அறிக்கையை நம்பலாம்.

நான் மேல் கூறியது போன்று, ஜமா அத்துச் சஹீஹில் இஸ்லாமைச் சார்ந்த உறுப்பினர்கள் அனைவரும் நோன்பு நோற்பதிலும், நோன்பு முறிப்பதிலும்

மற்றும் ஈதுத் தொழுகையை நிறைவேற்றுவதிலும் ஒரு உடலைப் போன்று ஒற்றுமையாக இருக்கவேண்டும். இன்ஷா அல்லாஹ்.

இஸ்லாமிய சமுதாயம் அனைத்து ஒற்றுமையாக இருப்பதை பார்க்க வேண்டும் என்பதே எனது ஆசை மற்றும் பிரார்த்தனையாகயிருக்கிறது.

**இறுதி நாள் வரையிலும் உங்களுடைய உள்ளங்களிலும் உங்களுடைய தலை முறையினர்களின் உள்ளங்களிலும் நிலைத்திருக்குமளவு மிக நேர்மையான முறையில் நீங்கள் தக்வாவை பெற வேண்டும். எந்த ஓர் முடிவை எடுத்தாலும் அது திரு சுன்னத் மற்றும் திருக்குர் ஆனிய சட்டங்களை மீறுமளவில் அமைய கூடாது. அதற்கு பதிலாக திருக்குர் - ஆன் மற்றும் திரு சுன்னாவை குறிப்புகளாக எடுத்துக் கொண்டு அவற்றுக்கு ஏற்ப நீங்கள் முன் செல்வீர்களேயானால் நிச்சயமாக, அத்தகைய செயல்பாடுகளில் அல்லாஹ்வின் அருட்கொடைகள் இருக்கும். இன்ஷா அல்லாஹ் ஆமீன்.**

ஜமா அத்துச் சஹீஹில் இஸ்லாமை சார்ந்த எனது எல்லா தோழர்கள் மீதும் அல்லாஹ் அருட்கொடைகள் பொழியட்டும். ஹஸ்ரத் முஹம்மது (ஸல்) அவர்களின் உம்மத்தை சார்ந்த அனைவரையும் அவன் ஆசிர்வதிக்கட்டும். அல்லாஹ்வின் திருப்தியை பெறும் பொருட்டு இஸ்லாமின் ஒரு உண்மையான அமைப்பாக ஒன்றிணைந்து செயல்பட அவன் வழிவகுத்தருளட்டும். இன்ஷா அல்லாஹ்! ஆமின்!




Translated by:
*Naib Amir Azim Ahmad*
*7339689239*

# ISSUED BY

**R. JAMALUDDIN RAOTHER SAHIB**
Amir Kerala South Zone, India
Kerala contact
No: 9447001832

**SIRAJ DEEN SAHIB**
Amir Tamilnadu state, India
Tamilnadu Contact
No: 7502272774

**PUBLISHED BY:**
**JAMAAT-UL-SAHIH-AL-ISLAM**
**KALIAKKAVILAI BRANCH**
**(TAMILNADU AND KERALA BORDER)**
**Ph No: 9789180817, 9171977109**